பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

E.P.No.190/2023

ம.சா.1– கார்த்திக் – , த/பெ.சொக்கலிங்கம்

நாள். 12.03.2026

**ம.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எதிர்மனுதார் நிரந்தர முகவரியும், நிரந்தர வருமானம் உள்ளது என சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நானும், பழனியம்மாளும் ஏற்கனவே நிறைவேற்று மனு 297/2022 இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதை மேற்கொண்டு நடத்தாமல் வாபஸ் பெற்று விட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த நிறைவேற்று மனுவில் ஏற்படுத்தப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். உத்தரவாணை **எ.ம.சா.ஆ.1**. ஆகும். உத்தரவு **எ.ம.சா.ஆ.2.** ஆகும். நான் தாக்கல் செய்த மனுவில் சொத்து விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்கான முந்தைய மனுவை வாபஸ் பெற்றேன் என இந்த மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் அவர் பெயரில் இருந்த சொத்துக்களை வேறு நபர்களுக்கு மாற்றி விட்டார். அவர் பெயரில் எந்த சொத்துக்களும் இல்லை. அவர் பெயரில் சொத்துக்கள் உள்ளது என்றாலும் அதற்குரிய வில்லங்கச் சான்றிதழையும், சான்றிட்ட ஆவணங்களையும் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தது குறித்து சிசி.எண்.166/2019 நீதித்துறை நடுவர் எண்.3ல் எதிர்மனுதாரர் எந்த தவறும் செய்யவில்லை என்று விடுதலை பெற்றுள்ளார் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் உத்தரவுதான். அது **எ.ம.சா.2.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது திருத்தல் மனு தாக்கல் தாக்கல் செய்து அவரின் முகவரியை வேண்டுமென்றே தவறாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. அவர் சொல்லிய முகவரியில் இல்லை என்பதால் திருத்தல் மனு தாக்கல் செய்தேன். மனுவில் சொல்லியுள்ள தீர்ப்பாணை தொகை விவரம், வட்டி விகிதம் சரியல்ல என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு எந்த வித

**தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. தாவா மனுதள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை- இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.12 20:56:36 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.